இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 339 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 03 – சனிக்கிழமை 19 ஜூலை 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 339 : Thiruvalluvar Year - 2056 - Aadi 03 - Saturday 19 July 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## “ஓரணியில் தமிழ்நாடு” – மக்களின் வரவேற்பு, கூடுதல் மகிழ்ச்சியைத் தருகிறது! அடுத்த

# 30 நாட்களில் 2.5 கோடி பேரை உறுப்பினர்களாக்குவதே நம் இலக்கு!

## “வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துரைப்பீர்!” - என மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் - தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.7.2025) முகாம் அலுவலகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர்கள் சேர்க்கை தொடர்பாக கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளரும் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி கருணாநிதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் கழக மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜூலை 19-**

**“ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையில், அடுத்த 30 நாட்களில் 2 கோடியே 50 லட்சம் பேரை சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க “ஓரணியில் தமிழ்நாடு” பரப்புரை இயக்கத்தை அண்ணா அறிவாலயத்தில், கடந்த ஒன்றாம் தேதி தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து வீடு, வீடாகச் சென்று மக்களை சந்தித்து அரசின் செயல்பாடு, மக்கள் நலத்திட்டங்களை எடுத்து கூறினார்.

### உறுப்பினர் சேர்க்கைப் பணியில் தி.மு.க.வினர் தீவிரம்!

இதனை அடுத்து, திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி வீடு, வீடாக சென்று ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணியில் தி.மு.க.வினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த, ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை உறுப்பினர் பதிவு நேற்று வரை, ஒரு கோடியே 46 லட்சத்து 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளனர். அதிகபட்சமாக ரிஷிவந்தியத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 192 பேர் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். இதற்கு அடுத்தப்படியாக கரூரில் ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 600 பேர், ஓரணியில் தமிழ்நாட்டில் இணைந்துள்ளனர்.

தி.மு.கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (17.07.2025) காலை நடைபெற்றது. காணொலி மூலம் நடைபெற்ற கூட்டத்தில், “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை குறித்து ஆலோசிக்கப்பட்டது. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, துணை பொதுச்செயலாளர்கள் இ.பெரியசாமி, கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ், ஆ.ராசா, திருச்சி சிவா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறுகையில்,

### வீடு வீடாகச் சென்று பரப்புரை மேற்கொள்ள வேண்டும்!

தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்கவும், திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் கொண்டு வர வீடு, வீடாகச் சென்று பரப்புரை மேற்கொள்ளவும், தி.மு.க.வில் உறுப்பினர்களாக சேர்க்கவும், ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பை கடந்த 3ம் தேதி தொடங்கியதை குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் கொண்டுவர மக்களைத் தேடி வீடு, வீடாகச் செல்கிறோம் என்பது மகிழ்ச்சியாக உள்ளதாகவும், செல்லும் இடங்களில் எல்லாம் மக்களின் வரவேற்பு நன்றாக உள்ளதாகவும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார். ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் 10 நிமிடங்களாவது தி.மு.க.வினர் கலந்துரையாடுவதை உறுதி செய்திட வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் அதன் கூட்டணியாக இயங்கிக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள், தமிழ்நாட்டுக்கு இழைத்துள்ள - இழைக்கவுள்ள அநீதியை ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் எடுத்து சொல்வது தான் இந்த முன்னெடுப்பின் நோக்கம் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

### பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் தி.மு.க.வுக்கு மிகப்பெரிய சொத்து!

அடுத்த 30 நாட்களில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் 2 கோடியே 50 லட்சம் பேரை திமுக உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்றும் மாவட்ட செயலாளர்களிடம் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். திமுக உருவாக்கியிருக்கும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் தி.மு.க.வுக்கு மிகப் பெரிய சொத்து என்றும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்டுகளை எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலுக்கும், அதற்கு பிறகும் பயன்படுத்தி கொள்ளவேண்டும் என்றும் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

### “ஓரணியில் தமிழ்நாடு” எனக் கைகோர்க்கும் குடும்பங்கள்!

சென்னை, ஜூலை 19-

நேற்று முன்தினம் காலையில் நடைபெற்ற காணொலிக் கூட்டத்தையடுத்து, கழகத் தலைவர் - மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவு:

**“உறவென விருந்தோம்பல் வழங்கி, “ஓரணியில் தமிழ்நாடு” எனக் கைகோக்கும் குடும்பங்கள்!**

**“எனது கணவர் மாற்றுக்கட்சியில் கிளைச் செயலாளர். அவரைத் தவிர எங்கள் குடும்பத்தில் உள்ள எல்லோரையும் தி.மு.க.,வில் இணைத்துக் கொள்கிறோம்” எனக் கரூர் மாவட்டத்தில் நிகழ்ந்தது. தமிழ்நாட்டின் உணர்வாகி, உடன்பிறப்புகள் பெருக வேண்டும் என மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தினேன்.”**

மகாராஷ்டிரா போன்று

## ‘வாக்காளர் பட்டியலைச் சீரமைப்பது’ எனும் போர்வையில் வெற்றியைப் பறிக்க முயற்சி !

### பா.ஜ.க. மீது மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

*சாய்காவுன், ஜூலை 19-*

மகாராஷ்டிர மாநிலத்தில் வாக்காளர் பட்டியலை சீரமைத்து வெற்றியை பறித்தது போல, பீகார் உள்ளிட்ட மாநிலங்களிலும் பா.ஜ.க. வெற்றியை பறிக்க முயற்சிப் பதாக மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி புகார் தெரிவித்துள்ளார்.

அசாம் மாநிலம் சாய்காவுனில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி



தலைமையில் பேரணி நடைபெற்றது. பேரணியின் முடிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அசாம் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி சக்தி வாய்ந்ததாக இருந்ததாகவும், காங்கிரஸ் கட்சியில் இருந்த ஒருவரை தம் பக்கம் இழுத்து பா.ஜ.க. முதலமைச்சர் ஆக்கியதாகவும் புகார் கூறினார்.

முன்னதாக பேசிய ராகுல்காந்தி, மகாராஷ்டிர மாநிலத்தில் வாக்காளர் பட்டியலை சீரமைத்து வெற்றியை பறித்தது போல், பீகார் உள்ளிட்ட மாநிலங்களிலும் பா.ஜ.க. வெற்றியை பறிக்க முயற்சிப்பதாக விமர்சித்தார். இதற்கு இந்திய தேர்தல் ஆணையமும் துணை போவதாக ராகுல்காந்தி குற்றஞ்சாட்டினார்.

இந்திய தேர்தல் ஆணையம் ஒட்டுமொத்தமாக பா.ஜ.க.விற்கும், அதன் தலைவர்களுக்கும் பணி செய்கிறது தமது கடமையை இந்திய தேர்தல் ஆணையம் மறந்து விட்டது நான் பல முறை வாக்காளர் பட்டியலையும் வாக்களிக்கும் வீடியோக்களையும் தருமாறு கேட்டேன்

ஆனால்எனது வேண்டுகோளுக்கு தேர்தல் ஆணையம் செவி சாய்க்கவில்லை எனவும் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

## பெருந்தலைவர் காமராஜர் குறித்து சர்ச்சைக்குரிய வீண் விவாதங்கள் வேண்டாம்!

# கலகமூட்டிக் குளிர்காய நினைக்கும் தீயவர்களின் எண்ணத்திற்கு இடம் தராதீர்!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!



**சென்னை, ஜூலை 19-**

**பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் குறித்து சர்ச்சைக்குரிய வீண் விவாதங்கள் வேண்டாம் எனவும், கலகமூட்டிக் குளிர்காய நினைக்கும் தீயவர்களின் எண்ணத்திற்கு இடம் கொடுக்காதீர் எனவும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இதுகுறித்து தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-**

கலகமூட்டிக் குளிர்காய நினைக்கும் தீயவர்களின் எண்ணத்துக்கு இடம் கொடுக்காதீர்!

பெருந்தலைவர் காமராசரைப் ‘பச்சைத்தமிழர்’ என்று போற்றியவர் தந்தை பெரியார்.

குடியாத்தம் இடைத்தேர்தலில் பெருந்தலைவர்க்கு எதிராக வேட்பாளரை நிறுத்த வேண்டாம் என முடிவெடுத்தவர் பேரறிஞர் அண்ணா.

பெருந்தலைவர் மறைந்த போது ஒரு மகன் போல நின்று இறுதி மரியாதை ஏற்பாடுகளைச் செய்து, நினைவகம் அமைத்து, அவரது பிறந்தநாளைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தவர் தமிழினத் தலைவர் கலைஞர்.

உடல் நலிவுற்ற நிலையிலும் எனது திருமணத்துக்கு நேரில் வந்து பெருந்தலைவர் வாழ்த்தியது என் வாழ்நாளில் கிடைத்தற்கரிய பெரும்பேறு!

அத்தகைய பெருந்தலைவர், பெருந்தமிழர் குறித்துப் பொது வெளியில் சர்ச்சைக்குரிய விவாதங்கள் நடப்பது சரியல்ல. மரியாதைக்குரிய தலைவர்களின் மாண்பைக் காக்கும் வகையில்தான் எந்தக் கருத்தும் பகிரப்பட வேண்டும்.

சமூகநீதியையும் மதச்சார்பற்ற நல்லிணக்கத்தையும் உருவாக்க வாழ்நாளெல்லாம் உழைத்த பெருந்தலைவரின் கனவுகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம்! வீண் விவாதங்களைத் தவிர்ப்போம்!

இவ்வாறு தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.